முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான்
ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1487

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.10.2023,** புதன்கிழமை

1. ஞான சூட்சும அவதாரம் புரிந்த
ஞானியே ஆறுமுக அரங்கனே
தான தர்மத்தின் பலம் கொண்ட
தனிப்பெரும் கருணைவடிவான தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 08ம் நாள், 25.10.2023, புதன்கிழமை)
ஆசியதும் அரங்கனுக்கு சக்திகூட்டி
ஆறுமுகன் யான் நித்தம் நித்தம்
3. வாசி யோகம் நடத்தி
வல்லமைபட புருவ பூட்டைத் திறந்து
திறந்துமே சர்வஞானபலம்
தேசிகனுக்கு கலியினில் யானே தந்துள்ளேன்
4. உள்ளபடி அரங்கனுள் யானிருக்க
உலகோர் அரங்கனைத் தேடி வந்தால்
வல்லமைபட ஞானியாகும் வாய்ப்பும்
வரம் கிட்டி இனிபிறவாத மகா சித்தியும்
5. சித்தியும் அரங்கனால் கிட்ட நேரும்
சித்த நிலைகள் சர்வ சூட்சுமங்கள்
இத்தரையில் உலகோருக்கு இலகுவாய் சித்திக்கும்
ஆகவே அரங்கன் தொடர்புகூட்டி
6. அகிலத்தார் ஞானிகள் ஆகவே
அற்புதத்தை கலியில் யானே நடத்துகின்றேன்
மிகைபட உலகோர் ஓங்கார ஞானியைத் தேடி
மேலான ஞானம் வேண்டி வந்தால் வகையான

7. வகைவகையான வரங்கள் கூடி
வையகத்தில் வருவோரெல்லாம் ஞானிகளாவர்
ஆகவே உலகமாற்றம் நிகழ
அரங்கனைக்கொண்டுதான் ஆறுமுகன் இயக்குகின்றேன்

8. வரங்கள் பெற உலகோர்
அரங்கனைத் தேடி வர
வையகத்தில் ஞானிகளின் எண்ணிக்கை மிகுதியாகி
வல்லமைபட இந்த லோகம் ஞானலோகமாகி

9. ஆகியே ஞான ஆட்சிக்காலங்களும்
அற்புதம்பட அரங்கனாலும் அரங்கன் தொண்டர்களாலும்
அரங்கனை நம்பி வருகின்ற மாந்தர்களாலும்
இனிதே நடந்தேறக் கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–